திருப்பத்தூர் மாவட்டம்

# நகரம், ஒன்றியம், பேரூர் வாரியாக கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, பொதுபணித்துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நகரம், ஒன்றியம், பேரூர் வாரியாக

கீழ்கண்ட தேதிகளில் நடைபெறும் கழக பொது உறுப்பினர்கள் கூட்டங்களை சம்மந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்து நடத்திடவும், இக்கூட்டத்தில் நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர், நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் நாள், நகரம், ஒன்றியம், பேரூர், இடம் விவரம் வருமாறு:

| வ.எ. | நாள் | நேரம் | நகரம் / ஒன்றியம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 01.09.24 - ஞாயிறு | காலை 9 மணி | மாதனூர் கிழக்கு ஒன்றியம் | JBR மஹால், மாதனூர் |
| 2 | | காலை 11 மணி | மாதனூர் மத்திய ஒன்றியம் | SS மஹால், பள்ளித் தெரு |
| 3 | | நண்பகல் 12 மணி | மாதனூர் மேற்கு ஒன்றியம் | SVN மஹால், கரும்பூர் |
| 4 | | பிற்பகல் 2 மணி | ஆம்பூர் நகரம் | ஜெகசக்தி மஹால், சான்றோர்குப்பம் |
| 5 | | பிற்பகல் 3.30 மணி | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் | ஜோதி மஹால், பத்தாப்பேட்டை |
| 6 | | மாலை 4.30 மணி | உதயேந்திரம் பேரூர் | இருதய ஆண்டவர் சமுதாய கூடம், உதயேந்திரம் |
| 7 | 02.09.24 - திங்கள் | காலை 9 மணி | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | ஸ்ரீ சீனிவாச திருமண மஹால், குரிசிலாப்பட்டு |
| 8 | | காலை 10.30 மணி | ஆலங்காயம் பேரூர் | ஸ்ரீ ராஜலட்சுமி திருமண மண்டபம், ஆலங்காயம் |
| 9 | | காலை 11.30 மணி | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் | RR மஹால், மேல்நிம்மியம்பட்டு |
| 10 | | பிற்பகல் 12.30 மணி | வாணியம்பாடி நகரம் | KPA பேலஸ், வாணியம்பாடி |
| 11 | | பிற்பகல் 2 மணி | நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் | AN மஹால், திம்மாம்பேட்டை |
| 12 | | பிற்பகல் 3.30 மணி | ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | லட்சுமி மஹால் மண்டலவாடி |
| 13 | 03.09.24 - செவ்வாய் | காலை 9 மணி | ஜோலார்பேட்டை நகரம் | ஸ்ரீராஜராஜேஸ்வரி மஹால், ஜோலார்பேட்டை |
| 14 | | காலை 10.30 மணி | ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் | மாணிக்கம் மஹால், தாமலேரிமுத்தூர் |
| 15 | | நண்பகல் 12 மணி | ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் | துரை சண்முகம் மஹால், அக்ரஹாரம் |
| 16 | | பிற்பகல் 2 மணி | கந்திலி தெற்கு ஒன்றியம் | ஸ்ரீ வள்ளி மஹால், கெஜல்நாயக்கன்பட்டி |
| 17 | 04.09.24 - புதன் | காலை 9.30 மணி | திருப்பத்தூர் நகரம் | SRK கன்வென்சன் ஹால், திருப்பத்தூர் |
| 18 | | காலை 11 மணி | திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் | சுந்தரம் மஹால், வெங்கலாபுரம் |
| 19 | | நண்பகல் 12 மணி | கந்திலி கிழக்கு ஒன்றியம் | நாராயிணி மஹால், கசிநாயக்கன்பட்டி |
| 20 | | பிற்பகல் 2 மணி | கந்திலி மத்திய ஒன்றியம் | GSR மஹால், நந்தனம் காலேஜ் ரோடு |
| 21 | | பிற்பகல் 3.30 மணி | கந்திலி மேற்கு ஒன்றியம் | செல்வி சந்திரன் மஹால், காக்கங்கரை |
| 22 | | மாலை 4.30 மணி | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய அலுவலகம். |
| 23 | | | நாட்றம்பள்ளி பேரூர் | |

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**

செயலாளர், திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி–234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் 176ஆவது ஆய்வை சட்டமன்ற உறுப்பினர் பிரின்சின் குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொண்டார். குளச்சல் பகுதியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு எண்ணும் எழுத்தும் வகுப்பறை, பயன்பாடில்லாத கட்டடங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் உணவு உட்கொள்ளும் மாணவர்களுடன் கலந்துரையாடி ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக

# சென்னையை உருவாக்கிய முதல்வர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து - பாராட்டு!

## ஃபார்முலா கார் பந்தயத்தையொட்டி கலைஞானி கமலஹாசன் – இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து!

சென்னை, ஆக.31-

ஃபார்முலா - 4 கார் பந்தயம் சென்னையில் நடத்தப்படுவதையொட்டி கலைஞானி கமலஹாசன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து செய்தியில் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

**கலைஞானி கமலஹாசன்!**

இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கமல்ஹாசன் வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், “சென்னையில் நடைபெறவுள்ள ஃபார்முலா 4 கார் பந்தய திருவிழா பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

**இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்!**

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சென்னையில் நடைபெறவிருக்கும் ஃபார்முலா 4 தெருப் பந்தயம் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகத் தயாராக உள்ளது, இது நாட்டிலேயே முதல் முறையாகும். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்த அசாதாரண ஃபார்முலா 4 தெருப் பந்தயத்தை சென்னையில் கொண்டு வந்து இந்தியர்களுக்கு உற்சாகம் சேர்த்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

**நடிகர் தனுஷ் வாழ்த்து!**

நடிகர் தனுசும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில், இந்தியாவின் முதல் ஆன் ஸ்ட்ரீட் நைட் எஃப் 4 சேம்பியன்ஷிப்பை சென்னையில் நடத்துவதற்கு வாழ்த்துகள். விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பின் கீழ் நடைபெறும் இந்தப் பந்தயம், சென்னையின் அந்தஸ்தை உயர்த்தி, இந்தியாவை ஒரு முக்கிய விளையாட்டு நிகழ்வுகளுக்கான மையமாக மாற்றும் என்று நடிகர் தனுஷ் தெரிவித்துள்ளார்.

**நடிகர் சிவகார்த்திகேயன் வாழ்த்து!**

இது குறித்து, நடிகர் சிவகார்த்திகேயன் தனது எக்ஸ் தள பக்கத்தில் ஃபார்முலா கார் பந்தயத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். யுவன் இசையமைத்துள்ள கார் பந்தயம் குறித்த முழு தீம் பாடலையும் யூடியூப் லிங்க்குடன் பகிர்ந்து மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில், தெற்காசியாவின் முதல் ஆன் ஸ்ட்ரீட் நைட் ஃபார்முலா சாம்பியன்ஷிப்பை சென்னையில் நடத்துவதற்கு வாழ்த்துகள். இந்த முயற்சி வெற்றியடைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நடிகர் கார்த்தி வாழ்த்து!**

இது தொடர்பாக நடிகர் கார்த்தியும் பதிவிட்டுள்ளார். நம்முடைய சென்னையில் ஃபார்முலா கார் ரேஸ் நடைபெறுகிறது. இந்த விளையாட்டுக்கு தைரியம், திறன், துடிப்பான இளமை ஆகியவை முக்கியம். நமது துடிப்பான மெட்ராஸுக்கு இந்த கார் ரேஸ் மிகச்சிறந்த பொருத்தம். இந்த துணிச்சலான முயற்சியை கையில் எடுத்து தமிழ்நாட்டில் மோட்டார் விளையாட்டு வரலாற்றை உருவாக்குவதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. - எஸ்.பாஸ்கரன் பங்கேற்பு!

# 187-வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## மடிப்பாக்கம் எம்.கே.ஜெய் தலைமை! எஸ்.வி. ரவிச்சந்திரன் முன்னிலை!

சென்னை, ஆக.31-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப்பகுதி 187-வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (31.8.2024- சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மடிப்பாக்கம் பேருந்து நிலையம் அருகில், ருக்மணி மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் மடிப்பாக்கம் எம்.கே.ஜெய் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலை வகிக்கிறார்.

எம்.கே.ராமகிருஷ்ணன், ஆர்.மகாலிங்கம், எஸ்.ஹரிஹரன், பி.ரமேஷ், கே.தேவி கமல், வி.பாலாஜி, என்.ஆர்.சீனிவாசன், ஆர்.தயாளன், என்.வி.ஆனந்தகுமார், எம்.நிதிராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பாலவாக்கம் க.சோமு, பாலவாக்கம் த.விசுவநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வி.இ.மதியழகன், எம்.கே.ஏழுமலை, ஆ.அரிகிருஷ்ணன், தா.பஷீர், சி.பிரதீப், ரத்னா லோகேஷ்வரன், கா.வீ.தியாகராஜன், பா.அருண்குமார், வி.எட்டியப்பன்,

எம்.பார்த்திபன், என்.அனிஷ், த.விஜயபாலன், கி.ஸ்டாலின் மொழி, எம்.பி. அரிகிருஷ்ணன், ஆ.திலகவதி, சே.சிந்தன், வி.வெங்கடேசன், க.ரவீந்திரகுமார், ஜி.சுரேஷ், வி.ரஞ்சித்குமார், ஜெ.திவாகர், ஜெ.கே.மணிகண்டன், ஆர்.குமாரசுவாமி, ஆ.தேவராஜன், எம்.டேவிட் சௌந்தர் ராஜன், ம.ஆறுமுகம், சமீனா செல்வம், சர்மிளா தேவி திவாகர், வ.பாபு, தமிழரசி சோமு, க.ஏகாம்பரம், ஜி.சங்கர், முருகேசன், விமலா கர்ணன் உள்ளிட்ட மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

ஷெர்லி ஜெய் நன்றி கூறுகிறார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பாலவாக்கம் மு.மனோகரன் பங்கேற்பு!

# மதுரவாயல் 153வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டக் கழக செயலாளர் தி.சார்லஸ் அறிக்கை!

சென்னை, ஆக.31

மதுரவாயல் 153வது வட்டச் செயலாளர் தி.சார்லஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 153வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி வட்ட கழக அவைத் தலைவர் மங்களா நகர் க.நடராஜன் தலைமையில் வட்ட பொது உறுப்பினர் கூட்டம் போரூர், சக்தி நகர் ராஜ் மஹாலில் இன்று (31-08-2024) மாலை 5.00 மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் -அமைச்சர் மா.சுப்பிரமணியன், தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. மற்றும் கூட்ட ஒருங்கிணைப்பாளர் பாலவாக்கம் மு.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் எஸ்.அருணாச்சலம், இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி., இராமாபுரம் ஏ.விஜயபாலா, வி.ராஜேஷ், ச.சங்கர் கணேஷ் எம்.சி., இராமாபுரம் செ.ரவி, வி.எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், வே.மதியழகன், திருமதி.சாந்தி ராமலிங்கம் எம்.சி., கோ.இராமலிங்கம், எஸ்.பாரதி எம்.சி., கே.ராஜி எம்.சி., மற்றும் வி.தீனா, பி.மோகன், ஆர்.டி.பாஸ்கர், பி.பால்ரவி, லயன் பொன்.இராமசாமி, ம.விஜயா, ஆர்.ஸ்டான்லி, கே.முகமது இஸ்மாயில், இரா.ஏழுமலை, பி.செல்லமுத்து, எஸ்.குமார், ஜி.மணி, மு.சந்தோஷ்குமார், எஸ்.மணிகண்டன், கே.சுரேன், த. சுகுமார், ஏ.டி.நாகராஜ், வி.மாறன், டி.டில்லிபாபு, கே.கார்த்திக், டி.பன்னீர்செல்வம், வழக்கறிஞர் ஜெ.ஜெரோம் ஜெயராஜ்

மேலும் மதுரவாயல் தெற்கு பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் லயன் டி. பாலாஜி, இரா.பா.உதயகுமார், எஸ்.லாவண்யா, ஆர்.ஆர்.சரவணன், து.மகேஷ்குமார், எஸ்.சொக்கலிங்கம், ஏ.அன்பழகன், பி.சுரேஷ், வழக்கறிஞர் வெங்கடேசன், ஆர்.கண்ணன், மார்க்கபந்து, பி.கே.சரத், ஏ.தனசேகர், எஸ்.பஷீர், டி.நரேஷ், பி.கே.அப்பு, எம்.கோபி, பி.கே.ஆர். மஞ்சித், எஸ்.காளீஸ்வரி, பூங்கொடி, கிளாரா, ஜான்சி மற்றும் பாக முகவர்கள், மூத்த முன்னோடிகள் பாக உறுப்பினர்கள் குழு (பி.எல்.சி.) கழக செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியின் இறுதியாக வட்டக் கழக துணைச் செயலாளர் செ.முரளி கிருஷ்ணன் நன்றி உரை ஆற்றுகிறார்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு முன்னாள் துணை அமைப்பாளர்

# பு.பவளவண்ணன் சகோதரர் பு.பார்த்திபன் திருவுருவப் படம்!

## டி.கே.எஸ்.இளங்கோவன் திறந்து வைக்கிறார்! மயிலை த.வேலு பங்கேற்பு!

சென்னை, ஆக. 31-

சென்னை தென் மேற்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு முன்னாள் துணை அமைப்பாளர் பு.பவளவண்ணனின் சகோதரரும், கழகத் தோழருமான பு.பார்த்திபன் அண்மையில் மறைவுற்றார்.

அவரது திருவுருவப் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (31.8.2024 - சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் எண்.5 முதல் தெரு, கைலாசபுரம், மயிலாப்பூர் எனும் முகவரியில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் - கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அன்னாரின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கிறார்.

சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் த.வேலு, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் செ.கனிமொழி பத்மநாபன், மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, ரேவதி எம்.சி., 125வது வட்டச் செயலாளர் ஆர்.ஏ.தவனேசன், 88வது வட்டச் செயலாளர் சி.சீனிவாசன், த.விக்னேஸ்வரன் உள்பட பலரும் கலந்து கொள்கின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின், தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பறைசாற்றும் பெட்டகங்களாக திகழும் தொன்மையான திருக்கோயில்களைப் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், 2,000–வது குடமுழுக்காக மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பரசலூர், வீரட்டேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. மகா கும்பாபிஷேக விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார் உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் தர்மபுர ஆதினம் உள்ளிட்ட பலவேறு ஆதினங்கள் உள்ளனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - நந்தனம் கி.மதி எம்.சி. பங்கேற்பு!

# 123வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை!

சென்னை, ஆக.31-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம், நாளை (01.09.24 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை தேனாம்பேட்டை கவிஞர் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள சமூக நலக்கூடத்தில் (ஆவின் பூத் அருகில்) வட்ட கழக அவைத்தலைவர் எம்.கே.ஆலை ஆனந்த் தலைமையில் நடைபெறுகிறது.

123வது வட்ட துணை செயலாளர்கள் தேனை பி.பார்த்திபன், எஸ்.எல்.மணிகண்டன், எம்.உஷா, பொருளாளர் எஸ்.மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில், மாவட்ட பிரதிநிதிகள் மு.ஏ.முல்லைவேந்தன், கே.விஜயகுமார், பகுதி பிரதிநிதிகள் எஸ்.செல்வமணி, எம்.குப்பன், டி.ஜெகநாதன், ஆர்.அசோக்குமார், அ.விஜயகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக, சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளரும், 121வது வார்டு மாமன்ற உறுப்பினருமான நந்தனம் கி.மதி எம்.சி. ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே இக்கூட்டத்திற்கு 123வது வட்டக்கழகத்திற்கு உட்பட்ட வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி, வட்ட மாணவரணி, வட்ட மகளிர் அணி மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ-2 / பி.எல்.சி. நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள், கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை விடுத்துள்ளார்.